மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, இது உலக வங்கி உதவி பெற்று செயல்படுத்துகின்ற திட்டம். 500 ஏக்கருக்கு கீழே பாசனம் பெறும் கண்மாய்களைப் பொறுத்த வரையில் ஏற்கனவே சிறப்பு சிறு பாசனத் திட்டத்தின் கீழ் குளங்களை ஆழப்படுத்தவும், கரைகளைப் பலப்படுத்தவும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அவைகளை கைவிட வில்லை. அரசு அதற்கு தனித் திட்டங்களை தயாரித்து அந்தக் குளங்களை நவீனப்படுத்துவதற்கு முயற்சிக்கும்.

பொன்னாபுரம் கிராம வட்டாரத்திற்கு ஆளியார் பாசன வசதி ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 702—திரு. கு. ரமணி : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தாராபுரம் தாலுகா பொன்னாபுரம் கிராம வட்டாரத்தில் ஆளியார் பாசன வசதி ஏற்படுத்த பலமுறை அதிகாரிகள் வந்து சர்வே செய்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காமலிருந்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு பாசன வசதி கிடைக்க உடனடி ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) : பொன்னாபுரம் கிராமத்தில் 1,000 ஏக்கர் நிலம், பரம்பிக்குளம் மற்றும் ஆளியார் விரிவாக்கத் திட்ட ஆயக்கட்டில் சேர்க்கப் பட்டு, ஆய்வு வேலைகள் நடைபெற்று உள்ளன. மேற்படி கிராமத்தில் வாய்க்கால் வெட்டும் பணிகள் விரைவில் துவங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, இந்த பொன்னாபுரம் கிராமத்திலே சர்வே செய்து நீண்ட நாளாகி விட்டது. ஆரம்பத்திலே சர்வே செய்த காலத்திலே நிர்ணயிக்கப் பட்ட ஏக்கர் இப்போது குறைக்கப்பட்டிருக்கிறது என்று விவசாயிகள் கருதுகிறார்கள். அதற்குக் காரணம், அதற்குப் பக்கத்திலே உள்ள கிராமங்களிலே, வேறு பல கிராமங்களிலே நீர்ப் பாசனத்தை விஸ்தரிக்க வேண்டிய நிலைமையினால் ஏக்கரேஜ் குறைந்திருக்கிறது என்று அவர்களிடமிருந்து புகார் வந்துள்ளதா ? அப்படியென்றால் ஏற்கனவே போட்டுள்ள திட்டப்படி அதை நிறைவேற்ற அரசு முயற்சி எடுக்குமா ?

1981 ஏப்ரல் 15]

[முற்பகல் 10-30]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, தாராபுரம் வட்டம், பொன்னாபுரம் கிராமத்தின் மொத்த விஸ்தீரணம் வருவாய்த் துறை பதிவேடுகளின் படி கிட்டத் தட்ட 10,873·61 ஏக்கர்கள். பொன்னாபுரம் கிராமத்தின் தென்பகுதியிலே 1,500 ஏக்கர் பரப்பு சேர்க்கப்பட்டிருக்கிறது. அமராவதித் திட்டத்தின் கீழ் 13—4—1978 ஆணையின்படி அது சேர்க்கப்பட்டிருக்கிறது. மொத்தம், தாராபுரம் தாலுக்காவில் 38,150 ஏக்கர் தற்போது நடைபெற்று வரும் பரம்பிக்குளம்-ஆளியாறு பாசன விரிவாக்கத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட ஆணையிடப்பட்டிருக்கிறது. பொன்னாபுரம் கிராமத்திலே ஒரு சிறுபிரச்னை என்னவென்றால், தென் மேற்குப் பகுதியில் 600 ஏக்கர் நிலத்தடியிலிருக்கும் கனிப் பொருள்களை எடுக்கும்பொருட்டு தோண்டப்பட்டு, பாசனத்திற்குத் தகுதியில்லாத இடம் என்று ஒதுக்கப்பட்டு விட்டது. அது போக எஞ்சியிருக்கின்ற பகுதிகள் இப்பொழுது சேர்க்கப்பட்டிருக்கின்றன. கால்வாய் வெட்டுகின்ற பணியினைத் துவக்கும்படி ஆணையிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, நீண்ட நாட்களாகவே இந்தத் திட்டம் செயலுக்கு வராமல், அங்கிருக்கின்ற விவசாயிகள் இதை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதனால் இதைத் துரிதப் படுத்தி, குறிப்பாக இந்தக் காலத்திற்குள் இது முடிவடையும் என்று அரசாங்கத்தால் அறிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை 1981–82-க்குள் நிறைவேற்ற வேண்டுமென்று அரசு தெளிவுபடுத்தியிருக்கிறது.

டால்மியா சிமெட் ஆலை.

*வினா எண். 703—திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரியலூர் அருகிலுள்ள பெரிய நாகாலூர் சுண்ணாம்பு சுரங்கத்திலிருந்து டால்மியா சிமெண்ட் ஆலைக்கு சுண்ணாம்பு கற்கள் விநியோகம் யார் மூலம் நடைபெறுகிறது?

(ஆ) இந்த விநியோக உரிமம் (Lease) எவ்வளவு காலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது?